இதம் ஜ்யேஷ்டாய புத்ராய பக்தியுக்தாய சீலிணே.
சிஷ்யாயசயதோக்தாய வக்தவ்யம்நாந்யதாக்வசித்,
யேநோபதிஷ்டாவித்யேயம், ஸஏவபரமேச்வர:.
ஸ்வீயாம் பக்திம் வத ஸ்வாம்பயோஙஞாஙம்
ஸ்⁼கேஙஹி,
ஜாயதேமநுஜஸ்யாஸ்ய மத்யம ஸ்யாவிராகிண:.

தேவி உவாச

மார்க்கா ஸ்த்ரயோமேவிக்யாதா: மோக்ஷப்ராப்தௌ
நகாதிப,
கர்மயோகோஞாநயோகோ பக்தியோகச்ச ஸத்தம.
குணபேதாந்மநுஷ்யாணும் ஸாபக்திஸ்த்ரி
விதாமதா,
பரபீடாம் ஸமுத்திச்ய தம்பம் க்ருத்வா புர: ஸ்ஸரம்.
மாத்ஸர்யக்ரோதயுக்தோய: தஸ்யபக்திஸ்து
தாமஸீ,
பரபீடாதிரஹித: ஸ்வகல்யாணர்த்தமேவ ச. 157
நித்யம்ஸகா மோஹ்ருதயே யசோர்த்தோ
போகலோலுப:,
தஸ்யபக்தி: ஸமாக்யாதா நகாதிபது ராஜஸீ. 158

பரமேச்வரார்ப்பணம் கர்ம பாபஸம்க்ஷாள நாயச,
வேதோக்தத்வாத்தவச்யம் தத்கர்த்தவ்யம்
து மயாऽநிசம். 159

இதி நிச்சிதபுத்திஸ்து பேதபுத்திமுபாச்ரித:,
கரோதிப்ரீதயேகர்ம பக்தி: ஸா நகஸாத்விகீ. 160

பரபக்தே:ப்ராபிகேயம். பேதபுத்யவலம்பநாத் 161

பூர்வப்ரோக்தேஹ்யுபே பக்தீ, நபரப்ராபிகேமதே,
அதுநாபரபக்திம்து, ப்ரோச்யமாநாம் நிபோதமே:.

மத்குணச்ரவணம் நித்யம் மமநாமாநு கீர்த்தநம்,
கல்யாணகுணரத்நாநாம் ஆகராயாம் மயிஸ்திரம்.

சேதஸோவர்த்தநம் சைவதைலதாராஸமம் ஸதா,
ஸாமீப்யஸார்ஷ்டிஸாயுஜ்ய ஸாலோக்யாநாம்
ந சைஷணு. 164

மத்ஸேவாऽதோऽதிகம் கிஞ்சிந்நைவ
ஜாநாதிகர்ஹிசித்,
பராநுரக்த்யாமாமேவ சிந்தயேத்யோஹ்ய
தந்த்ரித:. 165

ஸ்வாபேதேநைவமாம்நித்யம்
ஜாநாதிநவிபேதத:,
மத்ரூபத்வேநஜீவாநாம் சிந்தனம் குருதேதுய:. 166

யதா ஸ்வஸ்யாத்மநி ப்ரீதி:, ததைவசபராத்மநி,
சைதன்யஸ்ய ஸமாநத்வாத் ந பேதம்குருதேதுய:.

ஸர்வத்ரவர்த்தமாநாயாம் ஸர்வரூபாம்சஸர்வதா,
நமதேயஜதே சைவாபி ஆசண்டாளாந்தமீச்வர.

நகுத்ராபி த்ரோஹ புத்திம் குருதேபே தவர்ஜ்நாத்,
மத்ஸ்தாநதர்சநே ச்ரத்தா மத்பக்த
தர்சநேததா. 169

மச்சாஸ்த்ரச்ரவணேச்ரத்தா மந்த்ரதந்த்ராதிஷு
ப்ரபோ,
மயிப்ரேமாகுலமதீ ரோமாஞ்சித தநு: ஸதா. 170

ப்ரேமாச்ருஜலபூர்ணாக்ஷ: கண்டகத்கதநிஸ்வந:,
அநந்யேநைவபாவேந பூஜயேத்யோநகாதிப. 171

மாமீச்வரீம் ஜகத்யோநிம் ஸர்வகாரணகாரணம்,
வ்ரதாநிமம திவ்யாநி நித்யநைமித்திகான்யபி. 172

நித்யம்ய: குருதேபக்த்யா, வித்தசாட்யவிவர்ஜித,
மதுத்ஸவதித்ருக்ஷாச மதுத்ஸவ க்ருதிஸ்ததா. 173

ஜாயதே யஸ்யநியதம் ஸ்வபாவாதேவபூதர,
உச்சைர்காயம்ச்ச, நாமாநிமமைவ கலுந்ருத்யதி,

அஹங்காராதிரஹிதோ, தேஹ தாதாத்ம்யவர்ஜித:
ப்ராரப்தேந யதாயச்ச க்ரியதே தத்ததாபவேத்.

நமேசிந்தா஽ஸ்தி தத்ராபி தேஹஸம்ரக்ஷணாதிஷு
இதி பக்திஸ்து யாப்ரோக்தா பரபக்திஸ்து
ஸாஸ்ம்ருதா.

யஸ்யாம் தேவ்யதிரிக்தந்து நகிஞ்சிதபி பாவ்யதே,
இத்தம் ஜாதாபராபக்தி: யஸ்யபூதரதத்வத:. 177

ததைவதஸ்யசிந்மாத்ரே மத்ரூபேவிலயோபவேத்,
பக்தேஸ்து யா பராகாஷ்டா ஸைவஞ்ஞாநம்
ப்ரகீர்த்திதம். 178

வைராக்யஸ்ய சஸீமா ஸா ஞாநேதது பயம் யத:,
பக்தௌக்ருதாயாம் யஸ்யாபி ப்ராரப்தவசதோநக.

ந ஜாயதே மம ஞாநம் மணித்வீபம் ஸகச்சதி,
தத்ரகத்வாsகிலாந் போகான், அநிச்சந்நபி
சர்ச்சதி. 180

த தந்தே மம சித்ரூபஞாநம் ஸம்யக்பவேந்நக,
தேநமுக்த: ஸதைவஸ்யாத், ஞாநாந்முக்திர்
நசாந்யதா. 181

இஹைவயஸ்யஞா நம்ஸ்யாத் ஹ்ருத்கத
ப்ரத்யகாத்மந:
மம ஸம்வித்பரதநோஸ்தஸ்ய ப்ராணு வ்ரஜந்தி ந.

ப்ரும்மைவஸம்ஸ்ததாப்நோதி; ப்ரும்மைவப்ரும்ம
வேதய:,
கண்டசாமீகரஸமமஞாநாத்து திரோஹிதம். 183

ஞாநாதஞானநாசேந லப்தமேவஹி லப்யதே,
விதிதாவிதிதாதந்யத் ந கோத்தம வபுர் மம. 184

யதாதர்சேததாத்மநி யதாஜலே ததாபித்ருலோகே,
சாயா தபௌய தாஸ்வச்சௌ விவிக்தௌதத்வ
தேவஹி. 185

மம லோகே பவேத்ஞானம் த்வைதபாவ
விவர்ஜிதம்,
யஸ்துவைராக்ய வாநேவ ஞானஹீநோம்
ரியேதசேத். 186

ப்ரும்மலோகேவஸேங்நித்யம் யாவத்கல்பம் தத:
பரம்,
சுசீனும் ஸ்ரீமதாம் கேஹே பவேத்தஸ்யஜநி: புந:.
கரோதிஸாதனம் பச்சாத் ததோ ஞானம்
ஹிஜாயதே,
அனேகஜன்மபீரஜங் ஞானம் ஸ்யாத்நை கஜன்மநி.
ததஸ்ஸர்வப்ரயத்நேந ஞானார்த்தம் யத்ன
மாச்ரயேத்,
நோசேத்மஹாங்விநாச ஸ்யாத் ஜன்மைதத்துர்லபம்
புன:. 189

தத்ராபி ப்ரதமேவர்ணேவேதப்ராப்திச்சதுர்லபா,
சமாதிஷட்க ஸம்பத்தி: யோக ஸித்திஸ்ததை வச.
ததோத்தமகுருப்ராப்தி: ஸர்வமே வாத்ரதுர்லபம்,
ததேந்த்ரியாணும் படுதா ஸம்ஸ்க்ருதத்வம்
தநோஸ்ததா, 191

அனேக ஜன்மபுண்யைஸ்து மோக்ஷேச்சா
ஜாயதே தத:,
ஸாதனே ஸபலேப்யேவம் ஜாயமானேபி யோநர:.
ஞானார்த்தம் நைவயததே தஸ்யஜன்மநிரர்த்தகம்,
தஸ்மாத்ராஜங்யதாசக்த்யாஞானார்த்தம் யத்னமாச்
ரயேத்
பதேபதேஸ்வமேதஸ்ய பலமாப்நோதிநிச்சிதம்
க்ருதமிவபயஸி நிகூடம் பூதேபூதே வஸதி
விஞானம,
ஸததம் மந்தயிதவ்யம் மநஸா மந்தானபூதேந. 196

ஸர்வம் த்ருச்யம் மம ஸ்தானம் ஸர்வேகாலாவ்ர
தாத்மகா:,
உத்ஸ்வாஸ்ஸர்வகாலேஷு யதோஹம்
ஸர்வரூபிணீ. 197

ஞானம் லப்த்வா க்ருதார்த ஸ்யாத் இதிவேதாந்த
டிண்டிம:,
ஸர்வமுக்தம் ஸமாஸேந கிம்பூய ச்ரோதுமிச்சதி.

இதம்துகீதாசாஸ்த்ரம்மே நாசிஷ்யாய
வதேத்க்வசிந்
நாபக்தாய ப்ரதாதவ்யம் நதூர்தாய ச துர்ஹ்ருதே,

ச்ராத்தகாலேபடேதேதத் ப்ராஹ்மஞ்ஞம்ஸமீபத:
த்ருப்தாஸ்தத்பிதரஸ்ஸர்வே ப்ரயாந்திபரமம்பதம்.

கீதாரஹஸ்யபூதேயம் கோபநீயாப்ரயத்நத:,
ஸர்வமுக்தம் ஸமாஸேநயத்ப்ருஷ்டம் தத்வயாநக.

இதி தேவீ கீதா ஸமாப்தா

தேவீ கீதை தேவீ பாகவதம் ஏழாவது ஸ்கந்தத்தில் 31 முதல் 40 அத்யாயங்களில் அடங்கியது. இதை பாராயணம் செய்பவர் லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று மனச்சாந்தியையும், அம்பாளிடம் அளவுகடந்த பக்தியையும் பெறுவார்.

———

ஸ்ரீ சிவாப்யாம் நம:

தேவீ கீதையின் பொருள்

1. சைத்ரமாதம் சுக்லநவமி வெள்ளிக்கிழமை யன்று வேதங்கள் அறிவிக்கின்ற ஒளிமயமான ஸ்வரூபம் தேவர்களின் எதிரில் எதிர்ச்சையாகத் தோன்றிற்று.

ஏ அரசே!

2. நான்கு திசைகளிலும் உருவெடுத்து வேதங்களால் துதிக்கப் பெற்றதும், கோடி சூர்யர் களின் ப்ரகாசமாயும் கோடி சந்த்ரர்கள் போன்ற குளுர்ச்சியும் கோடி மின்னல்களின் ஒளியுமுள்ள தாய் சிவப்பாய் தோன்றியது.

3. மேலும் சுற்றிலும் நடுவிலும் அளவு தெரி யாமலும்,

4. ஸ்த்ரீ புருஷன் அலி என்ற உருவமற்ற தாயும், ஒளியின் மிகுதியால் கண்களை மங்கச் செய்வதாயும் தோன்றிற்று.

5. பார்க்கும்பொழுதே அதில் மிக அழகிய ரூபத்துடன் ஸ்த்ரீ ஒருவள் தோன்றினாள். சிறு பெண், புதிய யௌவன சோபை. ஒவ்வொரு அவயங்களும் அழகே உருவெடுத்தது போல் தோற்றம்.

6. தங்க மயமான தோள்வளை, வளைகள் கழுத்து அட்டிகை, இவைகளால் விசேஷ சோபை

யுடனும், விலைமதிக்கத்தகாத மணிகள் இழைத்த ஆபரணம் (நெக்லஸ்) கழுத்தில் ப்ரகாசிக்கின்றது.

7-10 அஷ்டமீசந்திரன் போல் வளைந்த நெற்றியும், நீண்ட புருவமும், சிவப்புத் தாமரை போன்ற கண்களும், உன்னத நாஸிகையும், அழகிய உதடும் மல்லிகை-மாலதீ மாலையணிந்த கேசபாசமும், காச்மீர குங்குமம் நெற்றியிலும், மூன்று கண்களுடனும், பாசம் அங்குசம் வரம் அபயம் அணிந்த நான்குகைகளும் சிவந்த ஆடையணிந்தவளும் மாதுளை புஷ்பம் போன்ற காந்தியும் பிரஸன்ன முகத்துடன் மந்தஹாஸம் செய்துகொண்டு ஸ்வபாவத்தில் கருணையே உறுவெடுத்து வந்தது போன்ற அம்பாளைக் கண்டனர்.

தேவர்கள் கூறுகின்றனர் :

11. தேவிக்கு நமஸ்காரம், மஹாதேவியும், சிவையாயுமுள்ள ப்ரக்ருதிக்கு நமஸ்காரம். மங்களையான உனக்கு நியமத்துடன் நமஸ்காரம் செய்கின்றோம்.

12. மஹாலக்ஷ்மியாக அறிகின்றோம். எல்லா வித சக்தியான உன்னை தியானிக்கின்றோம். எந்த தேவீ எங்களது புத்தியை நல்வழியில்செலுத்துகிறளோ

13. ஓங்கார ரூபிணியும் ஹ்ரீங்கார மூர்த்தியும் பலவித மந்தர ஸ்வரூபமாயுமுள்ள கருணைக்கு நமஸ்காரம்.

14. இவ்விதம் தேவர்களால் துதிக்கப்பட்ட மதமுள்ள குயில் போன்ற குரலுள்ள மணித்வீப வாஸிநி இனிய குரலுடன் கூறினாள்.

15. பக்தர்களுக்கு கற்பக விருக்ஷம் போல் வரன் கொடுக்கும் நான் இருக்கின்றேன், என்ற அன்பு ததும்பும் வார்த்தையைக் கேட்டு மனதில் சந்தோஷமடைந்தனர்.

தேவர்கள் கூறுகின்றனர் :

16. ஏ பரமேச்வரி! எல்லாமறிந்தவளும் எல்லோருக்கும் ஸாக்ஷியாயும் விளங்குகின்ற உன்னால் மூவுலகிலும் சிறிதும் அறியப்படாதது ஒன்றுமில்லை.

17. அசுர அரசனை தாரகனால் இரவும் பகலும் துன்புறுத்தப்படுகின்றோம். ஏ சிவே! சிவனின் குமாரனால் அவனுக்கு வதம் என்று பிர்ம்மதேவன் வரன் கொடுத்திருக்கிறார்.

18. அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு பதில் கூறினாள் பரமேச்வரீ. இமவானிடத்தில் எனது சக்தியான கௌரீ பிறக்கப்போகிறாள். அவளை பரமசிவனுக்கு மணம் செய்விக்கவேண்டும். அவள் உங்கள் கார்யத்தை நிறைவேற்றுவாள்.

19. இமவான்மிக அருள் பொருந்திய அந்த வார்த்தையைக் கேட்டு, ஆனந்தக்கண்ணீர் பெறுக தளதளத்த குரலில் அரசியிடம் கூறினான்.

20. என்னை அனுக்ரஹிக்க விரும்புகிருய், மிகச் சிறந்த பாக்கியசாலியாகச் செய்கிருய். இல்லாவிடில் அறிவற்றவனுயும் அசைவற்ற வனுயுமுள்ள நான் எங்கே? ஸச்சிதானந்த வடிவ மான நீ எங்கே?

21. எல்லா வேதாந்தங்களிலும் உட்பொரு ளாய் விளங்கும் உனது ரூபத்தையும், அவ்விதமே பக்தியுடன் கூடிய யோகத்தையும் வேத சம்மந்த மான ஞானத்தையும் கூற வேண்டும்.

22. இவ்விதம் அவர் வார்த்தையைக் கேட்டு மலர்ந்த முகத்துடன் அம்பாள் வேதங்களின் ரகஸ்யமான தத்வத்தைக் கூற ஆரம்பித்தாள்.

23. ஏ மலையரசே! உலகம் உண்டாவதற்கு முன் நானே இருந்தேன். வேறு ஒன்றுமில்லை. நானும் இன்னதென்று ஊஹிக்க முடியாமலும் காண்பிக்க முடியாமலும் நிகரற்றதாயும் துக்க மற்றதாயுமிருந்தேன்.

24. அதற்கு இயற்கையிலுள்ள ஏதோ ஒரு சக்தி மாயா என்று விளங்குவதாக உள்ளது. அது எப்பொழுதுமிருப்பதாயுமில்லை ஒருபொழுது மில்லாததாயுமில்லை. இருவிதமாயுமில்லை. அவ்வித மிருக்க முடியாததால் (ஸத் அஸத் ஸதஸத் என்று கூற முடியாது.)

25 இதற்கு மாறுதலாக ஒரு வஸ்துவாக எப் பொழுதுமிருக்கிறது. நெருப்பில் சூடு போலும்

சூர்யனிடம் காந்தி போலும், சந்திரனிடம் நிலவு போலும் அது என்னுடன் கூடவே உள்ளது. ப்ரளய காலத்தில் அதில் ஜீவர்கள் அவர்களுடைய கர்மாக்கள் காலம் முதவியது இருக்கின்றது.

27. இவைகள் மாயையில் வேருக இல்லாமல் ஸுஷுப்தி-உரக்கத்தில் வ்ய்வ ஹாரம் போல் ஒன்ருக இருக்கின்றன. எனது சக்தியின் சம்பந்தத்திருல் நான் உலகத்திற்கு விதைபோல் காரணமானேன்.

28. அறிவு சக்தியிருப்பதால் நிமித்த காரணமாயும் குடத்திற்கு குயவன்போல். உலகமாக ஆகுவதால் ஸமவாயியாயும் மண்போலும் ஆகிறேன்.

29. இவ்விதமுள்ள காரணத்தை சிலர் தவம் என்றும், சிலர் இருள்-தம:-என்றும்; ஜடம் என்றும்; ஞானம்-மாயை-ப்ரதானம்-ப்ரக்ருதி சக்தி என்றும் கூறுகின்றனர்.

30. வேதாந்திகள் அவித்யை என்றனர். இவ்விதம் சாஸ்திரங்களில் உலக காரண வஸ்துவை பல பெயரால் அழைக்கின்றனர்.

31. அந்த மாயை அறிவிற்கு விஷயமாதலால் ஜடம். பிரும்மஞானத்திருல் நாசமடைவதால் ஸத் இல்லை சேதனமாருல் அறிவிற்கு விஷயமாகாது விஷயமாகுவதால் அது ஜடம்.

32. சேதநம் தாருக விளங்கும் வேறுவஸ்துவிருல் விளங்கப்படாது. தன்ருலே ப்ரகாசிக்கப்

படும் என்றும் கூறமுடியாது: அப்படியானால் அது எதனால் என்று அனவஸ்தைதோஷம் ஏற்படும்.

ஏ மலையரசே :

33. தான் ப்ரகாசித்துக்கொண்டு மற்றதை யும் ப்ரகாசப்படுத்துகிறது. அத்தகைய ஸித்த ஞானரூபமான எனக்கு என்றும் அழிவில்லை என்று அறிவாயாக.

34. ஞானத்திற்கு இல்லாமை என்றும் கிடை யாது. ஜாக்ரத் காலத்தில் ஸ்வப்னம் இல்லை ஸ்வப்ன காலத்தில் ஸுஷுப்தி இல்லை. மூன்று காலங்களிலும் நான் என்ற அனுபவமிருக்கின்றது. ஆதலால் ஞானரூபியான ஆத்மாவிற்கு அபாவம் (இல்லாமை) இல்லை. பௌத்தர்கள் ஞானமும் க்ஷணிகம் ஆதலால் ஞானத்திற்கும் அபாவமுண்டு என்றார்கள். அப்படியானால் க்ஷணிகம் என்று யார் அறிகின்றாரோ அவனே ஆத்மா.

35. ஆகையினாலேயே நன்கு சாஸ்திரங்களைப் பயின்றவர்களால் நித்யமென்று சொல்லப்படு கிறது. ஆத்மாவில் பேரன்பு இருப்பதால் ஆனந்த ரூபமென்றும் சொல்லவேண்டும்.

36. ஆத்மாவினிடம், என்றுமில்லாமலிருக்கக் கூடாது எப்பொழுதுமிருக்கவேண்டும் என்ற அன்பு உள்ளது. (ஆகையினாலும் ஆனந்த ரூபம்) காணப்படுவது அனைவற்றும் மித்யை (தோற்றம் மட்டும்) ஆகையினால் ஒன்றிலும் ஒட்டாமலுள்ளது ஆத்மா.

37. ஆகையினுலேயே தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவினுலும் பரிச்சேதம் அளவு அல்லது; முடிவு கிடையாதென்பது எனது மதம். அந்த ஞானம் ஆத்மாவின் தர்மமல்ல தர்மமாஞல் ஆத்மா ஜடமாகும்.

38. ஞானம் ஜடசேஷம் ஜடத்தின் குணம் என்பது பார்த்ததுமில்லை ஸம்பவிக்கவும் நேராது சித்தின் தர்மம் என்று கூறுவது சரியில்லை, ஞானம்சித். அதுசித்தர்மம் என்ருல் சித்தினின்றும் வேறுபட்டதாகும்.

39. ஆகையிஞல் ஆத்மா ஞானரூபம் எப்பொழுதும் ஸுகரூபமும் ஸத்யமும் பூர்ணமும் அஸங்கமும் ப்ரபஞ்ச ஸம்பந்தமில்லாததுமாக உள்ளது.

40. அந்த ஆத்மா காமம் கர்மாவுடன் கூடிய தனது மாயையிஞல், முன் அனுபவித்த ஸம்ஸ்காரத்திஞலும் காலம் கர்ம இதன் விபாகத்திஞலும் (பலனைக்கொடுக்கும் நிலைமை)

41 தத்துவத்தை நன்கு புரிந்துகொள்ளாத்திஞலும் உலகத்தைப் படைக்க எண்ணமுள்ளவஞக ஆகிருன். கீழ்ச் சொல்லியது, எனது அலௌகிகம், உலகத்தில் காணமுடியாத ரூபம்.

42. எல்லோருடைய கர்மாக்களுக்கும் இருப்பிடம் இச்சாசக்தி ஞானசக்தி க்ரியாசக்திகளுக்கு

இருப்பிடம் ஹ்ரீங்கார மந்த்ரத்திற்கு அர்த்தம். அதை ஆதிதத்வமென்று சொல்லுகிறார்கள்.

43. அதிலிருந்து ஆகாசம் சப்ததன்மாத்ர மாக ஸூக்ஷ்மம் உண்டாகிறது

44. ஸ்பர்சரூபவாயு ரூபாத்மகமான தேஜஸ் ரஸாத்மகஜலம் கந்தாத்மக ப்ருதிவீ, இவைகளி லிருந்து ஸூத்ராத்மா. லிங்கமென்று சொல்லப் வது. இவைகள் உண்டாகின்றன.

45. இந்த ஸூத்ராத்மாஸர்வஸ்வரூபம், ஸூக்ஷ்மசரீரம் எனப்படும் அவ்யக்தம் காரண தேஹம். அது முன் கூறப்பட்டது.

46. எதில் உலகம் பீஜமாகஸூக்ஷ்மமாக உள்ள தோ. எதிலிருந்து லிங்கசரீரம் உண்டாகிறதோ, அதுஸூத்ராத்மா. அதிலிருந்துபஞ்சீகரணம்என்ற வழியால் ஸ்தூல பூதங்கள் உண்டாகின்றன.

47-48. ஸ்தூலமான ஐந்து பூதங்களின் பஞ்சீ கரணம் சொல்லப்படுகின்றது. முன் சொல்லிய ஐந்து பூதங்களை ஒவ்வொன்றையும் இரண்டாக செய்து கொண்டு, ஒவ்வொன்றின் அரைபாகத் தை நான்காகச்செய்கிறது. அரைக்கால்பாகமா கும் நான்கு அரைக்கால்பாகங்களையும் சேர்த்து ஒன்றின் அரைபாகத்தில் சேர்த்தால் ஒரு பூதம் பூர்ணமாகும். அதாவது ப்ருதிவீயின் அரைபாகத் தில், ஜலம், தேஜஸ, வாயு,ஆகாயம் இவைகளின் அரைக்கால் பாகங்களை ஒன்று சேர்த்து அதில்

போட்டால் ப்ருதிவீ ஸ்தூலமாக உண்டாகிறது. தற்காலம் காணப்படுவது இது தான். இதுமாதிரி ஜலம், தேஜஸ், வாயு, ஆகாயம்.

49-50 ஸ்தூல பூதங்களின் கார்யம் விராட். இது ஆத்மாவிற்கு ஸ்தூலதேஹம். பஞ்சபூதங்களின் ஸத்வாம்சத்திளுல் ச்ரோத்ரம் (காது) முதலிய ஞானேந்திரியங்கள் உண்டாகின்றன. தனித்தனியாக அவை சேர்ந்து ஒரு அந்தக்கரணத்தையுண்டு பண்ணுகின்றன. அந்தக்கரணம் வ்ருத்தியின் மாறுதலால் நான்கு விதமாகிறது. மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தம். என்று.

51. அந்த பஞ்ச பூதங்களின் ரஜோம்சத்திளுல் க்ரமமாக கர்மேந்திரியங்கள் தனித்தனியாகவும், சேர்ந்து ப்ராணன், அபானன், வியானன், ஸமானன், உதானன் என்ற ஐந்தும், உண்டாகின்றன.

52-53. ஞானேந்திரியங்கள் ஐந்து. ப்ராணன் ஐந்து, புத்தி, மனம், இவை சேர்ந்து ஸூக்ஷ்ம சரீரம் எனப்படும். எனக்கு லிங்கம் என்று கூறப் படுகின்றது அங்கு ப்ரக்ருதி என்று கூறியது இருவிதமாகின்றது.

54. ஸத்வ குணம் ப்ரதனமாக மாயை என்றும், மூன்று குணங்களும் சேர்ந்து அவித்யை என்றும் சொல்லப்படுகிறது. தனது இருப்பிடத்தைக் காப்பது மாயை.

55-56-57. அதில் ப்ரதிபிம்பித்தது ஈச்வரன். தனது இருப்பிடத்தையறிவான். ஸர்வக்ஞன், ஸர்வகர்த்தா. எல்லோருக்கும் அனுக்ரஹம் செய்கிறான். இவ்விதம் சைதன்ய ப்ரதிபிம்பம் ஈச்வரன். அவித்யையில் ப்ரதி பிம்பித்தால் ஜீவன் ஸர்வ துக்கங்களையுமனுபவிக்கின்றான். ஜீவன் ஈச்வரன் இருவருக்கும் அவித்யையினால் மூன்று தேஹங்கள் ஏற்படுகின்றன.

58-59. மூன்று தேஹங்களில் அபிமானத்தினால் மூன்று பெயர்கள் ஏற்படுகின்றன. காரண ஸ்வரூபன் ப்ராஞ்ஞன், ஸூக்ஷ்ம தேஹாபிமானி தைஜஸன். ஸ்தூலசரீராபிமானி விச்வன் என்று கூறப்படுகிறது.

இவ்விதம் ஈச்வரனும் காரண-ஸூக்ஷ்ம-ஸ்தூலாபிமானத்தினால் ஈசன்-ஸூத்ராத்மா-விராட் என்று கூறப்படுகிறார்.

60. முதலில் கூறியவன் ஜீவன் அவனது தேஹத்தை சரீரமாய் பாவிப்பவன் வ்யஷ்டி என்றும், பிறகு கூறிய ஈச்வரன் ப்ரபஞ்சத்தையே சரீரமாய் பாவிப்பவன் ஸமஷ்டி என்றும் கூறப்படுகிறது. அவன் ஸர்வேச்வரன் ஜீவர்களிடம் அருள் புறிய நினைத்து.

61. என்னிடம் கல்பிதனாக எப்பொழுதும் என்னால் ப்ரேரணை செய்யப்பெற்று, பலவித போகங்களுக்கு இருப்பிடமான உலகத்தைப் படைக்கிறான.

62. சராசரமென்ற உலகம் முழுவதும் எனது மாயையினுல் ஏற்பட்டது. அந்த மாயையும் வாஸ்த்வமாக என்னைக்காட்டிலும் வேரல்ல.

63 வியவஹாரத்தைக் கொண்டு மாயா அவித்யா என்று கூறுகிறேம். வாஸ்த்வமாகப் பார்த்தால் இல்லை; தத்வம் மட்டும் உள்ளது.

64. அத்தகைய நான் ஸர்வஜகத்தையும் படைத்து,

65-66. அதற்குள் ப்ரவேசிக்கின்றேன். ஏ மலையரசே! மாயை கர்மா முதலியது டன்கூட ப்ராணனை முன்னிட்டு பரலோகம் செல்கிருன். இல்லாவிடில் எப்படி செல்லமுடியும். எவ்வளவு விதம் மாயை வேறுபடுகிறதோ அவ்வளவு விதமாக உபாதியின் வேற்றுமையினுல் கடாகாசம் மஹாகாசம் என்பது போல் நானும் வேற்றுமையை அடைகிறேன்.

67. சூர்யன் மேலான பொருளையும் கீழான பொருளையும் ப்ரகாசப்படுத்துவதினுல் தோஷமடைவதில்லை. அதுபோல் எல்லாவற்றிலும் இருந்தாலும் அதனுடைய தோஷம் என்னிடமில்லை. என்னிடம் புத்யாதியிலுள்ள கர்த்தா என்பதை அத்யாஸம் செய்து ஆத்மா கர்தா என்று சொல்லுகின்றனர் மூடஜனங்கள்.

68. புத்திமான்கள் அவ்விதமில்லை. ஜீவன் ஈச்ரவன் என்ற வேற்றுமையும் மாயையினுல் கல்பிதம்.

69. ஜீவர்கள் பலர் என்பதும் மாயையினு லேயே கல்பிதம். வாஸ்த்வமில்லை. கடாகாசம், மடாகாசம் என்பது போல கல்பிதம்.

70 தேஹம் இந்திரியம் இவைகளின்(வாஸனை வேற்றுமையின் ஞாபகத்தால் ஜீவர்களும் வேறு என்று நினைப்பது அறியாமை காரணமாக. வேறு இல்லை.

71. ஏ மலையரசே! இந்த உலகம் என் னிடம் குறுக்கும் நெடுக்கும் நெய்யப்படும் ஆடை போல் கோர்க்கப்பட்டுள்ளது. நான் ஈச்வரன், ஸூத்ராத்மா, விராட்ரூபமாக இருக்கிறேன்.

72. நானே! பிரம்மாவாயும், விஷ்ணுவாயும் ருத்ரனும், கௌரீ, ஸரஸ்வதி, லஷ்மி, ஸூர்யன் நக்ஷத்ரங்கள், சந்திரன்.

73. விலங்கு பறவை, சண்டாளன், திருடன் வேடன், கொடிய செயலுள்ளவன், நல்ல செய லுள்ள மஹாபுருஷன்.

74. பெண்-ஆண், அலி, மற்றும் எது காணப் படுகின்றதோ, பார்க்கப்படுகின்றதோ, எல்லா மாயும் நானே இருக்கிறேன்.

75. அசைவதும், அசையாததுமான எந்தப் பொருளும் என் ஸம்பந்தமற்றதாகயில்லை. அப்படி இருந்தால் மலடி மகன் போல் சூன்யமாக இருக் கும்.

76. இருட்டிய வேளையில் ஓர் கயிறு ஸர்ப்பம் என்றும், மாலை என்றும் பலவிதமாய்த் தோன்றுவது போல், நான் ஈசன் முதலிய வேற்றுமையினால் விளங்குகிறேன். ஸந்தேகமில்லை.

77. அதிஷ்டானம்: (தோன்றுவதற்குக் காரணமாயுள்ளது.) தோன்றுவதெல்லாம் அதன் ப்ரகாசத்தினால் தோன்றுகிறது. அதனால் அதன் இருத்தலால் தோன்றுகிறதும் இருத்தலையடைகிறது. வேறுவிதமில்லை.

78. இமவான் கூறுகிறார்:- உலகம் முழுவதும் உனது வடிவம் என்று நீ கூறுவதைப் பார்க்க விரும்புகிறேன். என்னிடம் இறக்கமிருந்தால் காண்பிக்க வேண்டும்.

79. இவ்விதம் இமவானின் வேண்டுகோளைக் கேட்டு விஷ்ணு முதலிய தேவர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் அதைக் கொண்டாடி மகிழ்ந்தனர்

80 பிறகு பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் சிவசக்தி, தேவர்களின் எண்ணப்படி தனது விச்வரூபத்தைக் காண்பித்தாள்.

81-97. தேவர்கள், மஹாதேவியின் மேலானவைக்கும்மேலான விராட்ரூபத்தைக் கண்டனர். தலை ஸ்வர்கமாகவும், சூர்ய சந்திரர்கள் கண்களாகவும், திசைகள் காதுகளாகவும், வாக் வேதங்களாக

வும், வாயு ப்ராணனாகவும், உலகம் ஹ்ருதயமாகவும், பூமி இடுப்பாகவும், ஆகாயம் தொப்பிளாகவும், ஜ்யோதிச் சக்ரம், நக்ஷத்ரம், ராசி முதலியவை மார்பாகவும், மஹர்லோகம் கழுத்தாகவும், ஜன லோகம் முகம். தபோ லோகம் நெற்றி. இந்திரன் முதலியவர் கைகள், சப்தம் ச்ரோத்ரேந்திரியம். அச்வினி தேவர்கள் மூக்கு, கந்தம்-நாஸேந்திரியம். வாகிந்திரியம் அக்னி, இரவு பகல் இமைகள், பிர்மா வின் இடம் புருவம், ஜலம் முகவாய்கட்டை, ரஸம் நாக்கு, யமன் கோரைப் பற்கள், மக்கள் மனைவியிட முள்ள அன்பு பற்கள், சிரிப்பு மாயை, கடைக் கண்பார்வை உலகஸ்ருஷ்டி, வெட்கம் மேல் உதடு, கோபம் கீழ் உதடு, அதர்ம மார்கம் பின்புறம், உலகத்தைப் படைக்கும் ப்ரஜாபதி குஹ்யம், ஸமுத் ரங்கள், வயறு, மலைகள் எலும்புகள், நதிகள் நாடி கள், மரங்கள் கேச பாசங்கள், குமார-வாலிப-முதிர்ந்த நிலைமைகள் ஸஞ்சாரம், மேகங்கள் மேல் கேசங்கள். காலைமாலை சந்திகள் ஆடைகள். சந்திரன் மனம், விஞ்ஞான சக்தி விஷ்ணு அந்த:கர ணம் ருத்ரன் குதிரை முதலான விலங்குகள் பின் புறம் உள்ளன. அதலம் முதலிய ஏழு கீழ் லோகங் கள் இடுப்பிற்குக் கீழ் தொங்குகின்றன. சுற்றிலும் ஆயிரக்கணக்கான ஜ்வாலைகளின் மாலைகளுடன் நாக்கினுல் உலகத்தை சுருட்டியிழுக்கின்றதாயும். கோரைப் பற்களைக் கடித்துக் கொண்டும், கண் களால் நெருப்பைக் கக்கிக் கொண்டும், ஆயிரக் கணக்கான தலைகளும் ஆயிரக்கணக்கான கண் களும் அவ்விதமுள்ள கால்களும் பலவித ஆயுதங்

கலை சுமந்து கொண்டும், ப்ராம்மண க்ஷத்ரிய முத லிய ஜாதிகளை ஆஹாரமாய்க் கொண்டும் கோடி சூர்யர்கள் போன்ற ஒளியும், கோடி மின்னல்கள் போன்ற காந்தியும் உள்ள கோர உருவத்தைக் கண்டு ஹா ஹா! என்று கதரி ஹ்ருதயம் நடுங்கி மூர்ச்சையடைந்தனர்.

98-99. பிறகு நான்கு புறங்களிலுமுள்ள வேதங்கள் மூர்ச்சையடைந்த தேவர்களை எழுப்பின. எழுந்து தேவர்கள் ஞாபகமடைந்து தைர்யமுள்ள வர்களாக பக்தி ரஸத்தினால் கண்ணீர் நிறைந்த கண்களுடன் தளதளத்த குரலுடன் துதிக்க ஆரம் பித்தனர்,

தேவர்கள் கூறினர்:

100. உனது பயங்கர ரூபத்தைக் கண்ட நாங்கள் பயமடைந்தோம். கோபத்தை அடக்க வேண்டும். குற்றங்களைப் பொறுக்கவேண்டும். உனது குழந்தைகளாகிய எங்களைக் காக்க வேண்டும்.

101. உலகத்தைக் காப்பவளே உனக்கு நமஸ் காரம். ஓங்கார ரூபியே நமஸ்காரம். எல்லா வேதாந்தங்களுக்கும் உட்பொருளே நமஸ்காரம். ஹ்ரீங்கார மூர்த்தியே நமஸ்காரம்,

102. எந்த உன்னிடமிருந்து, அக்னி-ஸூரியன் ஓஷதிகள் உண்டாகின்றனவோ அந்த ஸர்வரூபி யான உனக்கு நமஸ்காரம்.

103. எங்கிருந்து தேவர்கள் ஸாத்யர்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் உண்டாகின்றனவோ அந்த உனக்கு நமஸ்காரம்.

104. உனக்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் இரு பக்கங்களிலும், கீழும் மேலும் நான்கு திசைகளிலும் நமஸ்காரம்.

105. இந்த பயங்கர ரூபத்தை அடக்கி மிக அழகிய ரூபத்தைக் காண்பிக்க வேண்டும்.

106. இவ்விதம் பயந்த தேவர்களைப் பார்த்து கருணைக் கடலான அம்பாள் அந்த கோர ரூபத்தை மறைத்து அழகிய ரூபத்தைக் காண்பித்தாள்.

தேவீ கூறினாள்:

107. அல்ப புண்யமுள்ள நீங்கள் எங்கே? மிக ஆச்சரியமான இந்த ரூபம் எங்கே? ஆனாலும் பக்தர்களிடம் அன்பினால் காண்பித்தேன்.

108. வேதாத்யயனங்களாலும் யோகங்களாலும், தானங்களாலும், தவத்தினாலும், யாகத்தினாலும் எனது அன்பில்லாமல் பார்க்க முடியாது.

109. ஏ அரசே ஆரம்பித்த விஷயத்தைக் கேள். பரமாத்மா உபாதி ஸம்பந்தத்தினால் ஜீவர்களாயும் கர்த்தா என்றும் வழங்குகிறான்.

110. பிறப்பு இறப்பென்ற ஸம்ஸார வாழ்க்கைக்கு, ஏற்றச்சால் மேலும் கீழும் போய் வருவது போல் ஒரு பொழுதும் ஓய்வில்லை. இதற்கு

அஞ்ஞானம் மூலகாரணம் அதிலிருந்து காமம், அதிலிருந்து கர்மா, அதனால் ஜன்மா ஏற்படுகிறது.

111. ஆகையினால் அஞ்ஞானத்தை போக்கடிக்க அவசியமாய் முயற்சி செய்ய வேண்டும். அஞ்ஞானத்தை போக்கடிப்பதே ஜன்மாவிற்கு பயனாகிறது.

112. அஞ்ஞானத்தைப் போக்கடிப்பதில் ப்ரும்மவித்யையே சக்தியுள்ளது. ஆகையினால் நன்கு முயற்சி செய்து ப்ரும்ம ஞானத்தை ஸம்பாதிக்க வேண்டும்.

113. கர்மாவைச் செய்து கொண்டே இருக்க வேண்டுமென்று வேதம் சொல்லுவதால் நித்ய நைமித்திக கர்மாவும் அவசியமாகும். கர்மாவானது ஞானத்திற்கு உதவி புரியும்.

114. ஆனால் கர்மாவிற்கும் ஞானத்திற்கும் விரோதம் இருளும் ஒளியும் போலிருப்பதால் ஒரே சமயம் ஸம்பவிக்காது.

115. ஆகையினால் எல்லா வைதிகமான கர்மாக்களையும் சித்த சுத்தி உண்டாகும் வரையில் அவச்யம் செய்ய வேண்டும்.

116. சமம், தமம், திதிக்ஷா, வைராக்யம், மனஸ் சுத்தி இவை உண்டாகும் வரையில் கர்மாக்களைச் செய்ய வேண்டும். பிறகு செய்ய வேண்டாம்.

117. பிறகு வேதாந்தச்ரவணம் செய்யவேண்டும். பிறகு தத்வ மஸ்யாதி வாக்யத்திற்கு அர்த்தத்தை நன்கு விசாரிக்க வேண்டும்.

118. தத்வமஸி, முதலிய வாக்யம் ஜீவனுக்கும் பிரும்மத்திற்கும் ஒருமையை போதிக்கினறது. ஒருமையை அறிந்தால் பயமற்றவனுக, எனது ரூபமாக ஆகிருன்.

119. தத்வமஸி வாக்யத்தில் பதத்தின் அர்த்தத்தை முதலிலும் வாக்யத்தின் அர்த்தத்தை பிறகும் அறியவேண்டும். "தத்" என்ற பதத்திற்கு அர்த்தம் நான்.

120. "த்வம்" என்ற பதத்திற்கு அர்த்தம் ஜீவன், "அஸி', என்ற பதத்தினுல் இருவருக்கும் ஒருமை போதிக்கப்படுகிறது.

121. முக்யமான அர்த்தம் (அல்பமாயுள்ள ஜீவனுக்கும் மிகப்பெரிய ஈச்வரனுக்கும் ஐக்யம்) (ஒருமை) என்பது விரோதமானதால் இரு பதத்திற்கும் லக்ஷணை செய்ய வேண்டும்.

122. தத்-த்வம் என்ற இரு பதங்களுக்கும், சைதன்யம் மட்டும் லக்ஷ்யம் அப்படியானுல்ஐக்யம் ஸம்பவிக்கும். அவ்விதம் தெரிந்து கொண்டு தன்னுடன் ஒன்ருக ஆகவேண்டும்.

123. சென்ற மாதம் வெளியூரில் ஒருவனைப் பார்த்துஅவனை இன்று இங்கு பார்த்ததும் அவன் தான் இவன் என்று ஞாபகம் வருகிறது. ஸோ஽யம் தேவதத்த : என்று, ஞாபகம் வரும்பொழுது அந்த ஊரும் சமயமும் ஞாபகம் வருகிறது ஆனுல் இரண்டும் இங்கு இல்லை ஆனுலும் அவன்

தானென்று தீர்மானிக்கின்றோம் அப்பொழுது தேசகாலங்களை விட்டு அந்த மனிதனை மட்டும் ஸ: அயம் என்ற, பதங்கள் சொல்வது போல் தத்-துவம் என்பதும் அல்பத்தன்மை பெரும் தன்மை என்ற குணங்களை விட்டு ஜீவேச்வரர் களிடமுள்ள சைதன்யத்தை மட்டும் லக்ஷணையாக போதிக்கின்றது. உடன் ஸ்தூல சூட்சம காரண தேஹங்களை விட்டு ப்ரம்மமாகிறான்.

124. நேதி நேதி என்பது போன்ற வாக்யங் களால் எந்த எனது ரூபம் கூறப்படுகிறதோ அந்த ப்ரும்ம புச்சம் பரதிஷ்டா என்று கூறப்படும் ரூபத் தை பஞ்சகோசங்களை விட்டுவிட்டு அடைகிறான்.

125. அந்த ரூபம் பிறப்பதுமில்லை, இறப்பது மில்லை. ஒருஸமயம் உண்டாகி இருந்ததென்பது மில்லை. பிறப்பற்றது என்றுமுள்ளது. ஒரே மாதிரியாயுள்ளது முன்பும் புதியது. சரீரம் துக்கம் நாசம் அடையும்பொழுது அது அவை களையடைவதில்லை

126- 27. பிறகு அதையடைய உபாயம் கூறப் படுகிறது ஆத்மா எஜமானன் சரீரம் இரதம். புத்தி தேரோட்டி. மனம் கடிவாளம் இந்தியங்கள் குதிரைகள் சப்தஸ்பர்சரூபரஸ கந்தாதிகள் செல் லும் பாதைகள். ஜீவன் இந்திரியங்கள் மனம் இவை களுடன் கூடிய ஸாக்ஷியை போக்தா விஷயங் களை அனுபவிப்பவன் என்று புத்திமான்கள் கூறு கின்றனர்

128. பகுத்தறிவுள்ள புத்தியை ஸாரதியாயும், விஷயங்களில் செல்லாமல் வைராக்யமுள்ள

மனதைக் கடிவாளமாயும் செய்து கொண்டவன் ஸம்ஸார மார்கத்தின் அக்கரையாகிய எனது பரம ஸ்தானத்தையடைகிருன். (அப்படியில்லாவிடில் அடையமுடியாது ..

129. இவ்விதம் வேதாந்த ச்ரவண மனனுதிகளால் புத்திபலத்தைக் கொண்டு தீர்மானித்து. ஆத்ம ரூபமான என்னை இடைவிடாமல் தியானம் செய்யவேண்டும்.

130. ஸமாதிக்கு முன் தேவீப்ரணவத்தின் மூன்று அக்ஷரங்களை மந்த்ரார்த்தமான வ்யஷ்டி ஸமஷ்டிகளை த்யானம் செய்வதற்காக நன்கு புறிந்து கொள்ளவேண்டும்.

131. தேவீ ப்ரணவத்தின் ஹகாரம் ஸ்தூல தேஹம். ரகாரம் ஸூக்ஷ்மதேஹம், ஈகாரம் காரண தேஹம்-ஹ்ரீங்காரம் எனது துரீயரூபம்.

132. இவ்விதம் ஸமஸ்டி தேஹங்களிலும். (விராட் ஹிரண்யகர்ப ஸூத்ராத்மாக்களிலும்) அந்த அக்ஷரங்களை பாவனை செய்து பிறகு ஸமஷ்டியும் வியஷ்டியும் ஒன்றுதான் என்பதை புத்தி சக்தியால் பாவித்து தீர்மானிக்க வேண்டும்.

133. பிறகு இயற்கையான பக்தியுடன் கூடியவனுக உலகத்திற்கு ஈச்வரீயான என்னை ஹ்ருதய குகையில் கண்ணை மூடிக் கொண்டு தியானம் செய்யவேண்டும்.

134-136 த்யாநம் செய்யும்பொழுது ஹகார மாகின்ற விச்வனை ரகாரத்தில் லயப்படுத்தி ரகார மாகிய தைஜஸனை ஈகாரத்தில் லயப்படுத்தி, ஈகார மாகிய ப்ராஞ்ஞனை, ஹ்ரீம்காரத்தில் லயப்படுத்த வேண்டும். சொல்லின் பொருள் என்பதையும் வேற்றுமையையும் விட்டு விட்டு அகண்ட ஸச்சி தாநந்தமாய் ப்ரும்ம ரந்த்ரத்தில் த்யாநம் செய்ய வேண்டும்.

ஹிமவான் கூறுகிறார்.

137. ஹே மஹேசாநி! தத்வஞ்ஞாநத்தை அடைவதற்கு ஸாதனமான யோகத்தை ஸாங்க மாகக் கூறவேண்டும்.

தேவீ கூறுகிறாள்.

138. யோகமென்பது ஆகாயத்திலும், பூமி யிலும், பாதாளத்திலுமில்லை. யோகத்திலும்தேர்ச்சி பெற்றவர்கள் ஜீவனுக்கும், பரமாத்மாவிற்கும் ஒருமையையே யோகம் என்றார்கள்.

139. அதற்கு இடையூறாக, காமம், க்ரோதம் லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறும் யோகத்தைத் தடுக்கும்.

140. யோகாங்கங்களினால் அவைகளை விலக்கி யோகிகள் யோகத்தை அடைவார்கள்.

141-142. யமம், நியமம், ஆஸநம், ப்ராணா யாமம், ப்ரத்யாஹாரம் தாரணா, த்யாநம், ஸமாதி,

இந்த எட்டு ஸாதனங்களுடன் கூடியவனுக ப்ரும்மரூபியான என்னை த்யாநம் செய்யவேண்டும்

ஹே அரசனே! இயற்கையில் உண்டான பக்தியுடன் ஆஸநத்தில் அமர்ந்து உபநிஷத்துக்களாகிற வில்லில் உபாஸனத்திஞல் கூர்மையாய் செய்யப்பட்ட அம்பைத் தொடுத்து லக்ஷ்யத்தில் குறியாக அடிக்கவேண்டும்

144. ஓங்கரம் வில், ஆத்மா அம்பு, ப்ரும்மம் லக்ஷ்யம், (குறிவைக்கத் தகுந்தது) தவறுதலின்றி அடிக்க வேண்டும். அம்புபோல் லக்ஷ்யத்துடன் ஒன்ருக ஆகலாம்.

145. பரப்ரும்ம ஞானம் ஏற்படும் பொழுது ஹ்ருதய க்ரந்தி, (ஆத்மாநாத்மாவின் சேர்க்கை) பிரிந்து விடுகிறது. ஸர்வ ஸந்தேகங்களும் போய் விடுகின்றன. கர்மாக்கள் நாசமடைகின்றன.

146. அந்த பரமாத்மாவை சூரியனே, சந்திரனே, நக்ஷத்ரங்களோ, மின்னல்களோ, நெருப்போ, ப்ரகாசப்படுத்தவில்லை. அது ஒளிக்கும் பொழுது மற்றவை ஒளிக்கின்றன. அதன் ஒளியால் இவையெல்லாம் விளங்குகிறது.

147. பரப்ரும்மம், முன்பும், பின்பும், வலது புறமும், இடது புறமும் கீழும் மேலும், விளங்குகிறது. உலகம் முழுவதும் ப்ரும்மமே பரவியுள்ளது.

148. இவ்விதம் அனுபவமுள்ளவன் உத்தம புருஷன், பிறவிப்பயனை அடைகிருன். எப்

பொழுதும், பிரும்மமாய் சந்தோஷமாய் இருந்து ஒன்றையும் விரும்புவதில்லை. துக்கத்தையுமடைய வில்லை

149. நான் கைலாஸத்திலும், வைகுண்டத்தி லும், மற்ற இடத்திலுமில்லை. ஆனல் என்னை யறிந்த பக்தர்களின் தாமரை போன்ற ஹ்ருதயத் தில் வசிக்கிறேன்.

150, என்னை நன்கு அறிந்த ஞானிகளை பூஜை செய்வது என்னை கோடிமடங்கு பூஜை செய்த பயனை அளிக்கும். ஞானியின்குலம் பரிசுத்தமா கிறது. தாய் பிறவிப்பயனை யடைகிருள்.

151. எவன் மனம் என்னிடம் லயிக்கின்றதோ அவன் இருக்குமிடம் புண்யதேசம்.

152. ஹே மலையரசனே! உன்னல் கேழ்க்கப் பட்ட ப்ரும்ம ஞானத்தைப் பற்றி சொல்லி விட் டேன் இதற்கு மேல் சொல்ல வேண்டியதில்லை.

153. இதை பக்தியுடன் கூடிய சீலமுள்ள முதல் புதல்வனுக்கும், அவ்விதம் அர்ஹதையுள்ள சிஷ்யனுக்கும் கூறவேண்டும். வேறு விதம் கூடாது. இதை உபதேசம் செய்பவரே பரமேச் வரன்.

154. ஹே தாயே! உனது பக்தியை கூற வேண்டும். எதனல் மத்யம அதிகாரிக்கு அதிக வைராக்யமில்லாமலே சுலபமாய் ஞானம் ஸித்திக் குமோ ?

தேவீ கூறினாள்:

155. ஹே அரசனே! மோக்ஷத்தையடைவதற்கு கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூன்று மார்க்கங்கள் உள்ளன.

156-158. அந்த பக்தி மனிதர்களிடத்தில் குண பேதத்தால் மூன்று விதமாய் உள்ளது. பிறர் ஹிம்சையை குறித்து ஆடம்பரத்துடன் பொறாமை கோபத்தை முன்னிட்டு செய்வது தாமஸ பக்தி. பிறர் ஹிம்சையில்லாமல் தன் நன்மையை குறித்து பலத்தில விருப்பத்துட,ன் போகத்தில் ஆசைப் பட்டு புகழுக்காகவும் செய்வது ராஜஸபக்தி.

159-160. வேதத்தில் கூறிய நித்ய நைமித்திக கர்மாக்களை பாபத்தை விலக்குவதற்காக பரமேச்வர ப்ரீதியின் பொருட்டு பேதபுத்தியுடன் செய்வது ஸாத்விக பக்தி

161. பேதபுத்தியுடன் செய்வதால் இது பரபக்தியை அடைவிக்கின்றது. இது பரபக்தியாகாது.

162. முன் சொல்லிய ராஜஸ, தாமஸ, பக்திகள் பரபக்தியை அடைவிக்காது. இப்பொழுது பர பக்தியை சொல்லுகிறேன் கேள்.

163-166 எனது குணங்களை தினமும் ச்ரவணம் செய்வதும், எனது நாமாவை கீர்த்தனம்

செய்வதும், கல்யான குணங்களுக்கு இருப்பிடமான என்னிடம் எண்ணெயின் தாரைபோல் மனதை ஸ்திரமாய் செலுத்துவதும்' என்னை ஸேவிப்பதைக் காட்டிலும் மற்றொன்றையும் பெரியதாகக் கருதாமலும், ஸாமீப்ய, ஸாரூப்ய, ஸாயுஜ்ய ஸாலோக்ய, என்ற நான்கிலும் ஆசையில்லாமலும் பேரன்புடன் என்னையே தவறுதலின்றி தன்னுடன் ஒன்ருக நினைக்க வேண்டும். வேருக நினைக்கக்கூடாது. ஜீவர்களை எனது ரூபமாக சிந்திக்க வேண்டும்.

167. தனது ஆத்மாவில் அன்பு இருப்பது போல் சைதன்யம் ஒன்ருனதால் பரமாத்மாவிடமும் அதே அன்பு இருக்கவேண்டும். வேற்றுமை கூடாது.

168-171 எனது பக்தன் எங்கிருந்தாலும் கடைசீ வர்ணத்தார் வரை எப்பொழுதுமுள்ள என்னை நமஸ்கரிக்கின்ருன், பூஜைசெய்கிருன். பேதமில்லாததால் ஓரிடத்திலும் த்ரோகம் செய்வதில்லை. எனது ஆலயத்தில் தர்சனம் செய்வதும் எனது பக்தர்களிடத்தில் சிரத்தையும் என்னைப்பற்றி கூறும், சாஸ்த்ரங்களிலும் மந்த்ரங்களிலும், தந்த்ரங்களிலும் நம்பிக்கையும். என்னிடம் அன்பினுல் மயிர் கூச்சலை அடைந்து ஆனந்த கண்ணீர் நிரம்பிய கண்ணுடன் தளதளத்த குரலுள்ளவனுக அனந்ய பாவனையுடன் உலகிற்கு காரணமான என்னை பூஜிக்கின்ருன்.

172-174. நித்யமாயும் நைமித்தமாயுமுள்ள வ்ரதங்களை பக்தியுடன் உயர்ந்த பொருள்களைக் கொண்டு தினம் செய்கிருன் எனது. உத்ஸவத்தைப்பார்க்க விருப்பமும் உத்ஸவத்தைச்செய்ய

எண்ணமும் ஸ்வபாவத்திலேயே அவச்யம் ஏற்படு கிறது. எனது நாமாக்களை உறக்கச் சொல்லிக் கொண்டு ந்ர்த்தனமாடுவான் என் பக்தன்.

175-176. நான் என்ற அஹங்காரம் மமதை யில்லாமல் சரீரத்தையே ஆத்மா என்று எண்ணு மல் ப்ராரப்தகர்மாவினுல் எது ஏற்பட்டாலும் சரீரத் தைக் காப்பதில் கவலையில்லாமல் இவ்விதம் செய் யும் ப்ரேமபக்தி பரபக்தி எனப்படும்.

177-180. இந்த பக்தி இருந்தால் எதைக் கண்டாலும் அம்பாளாகவே நினைப்பான். வேறு ஒன்றையும் நினைக்கமாட்டான். ஏ மலையரசே! இவ்விதம் உண்மையாக பரபக்தி எப்பொழுது ஏற் படுகிறதோ அப்பொழுதே ஞான வடிவான என் னிடம் லயித்து விடுகிருன். பக்தியின் முதிர்ந்த நிலைமைதான் ஞானமெனப்படும். வைராக்யத் திற்கும் கடைசி எல்லை அதுதான் ஞானம் ஏற்பட் டால் அந்த இரண்டும் ஏற்படுமல்லவா? பக்தி செய் தும் எவனுக்கு ப்ராரப்த சக்தினுல் எனது தத்வ ஞானம் ஏற்படவில்லையோ அவன் மணித்வீபம் செல்கிருன். அங்கு சென்று எல்லாவித போகங் களையும் விரும்பாமலே அனுபவிக்கின்ருன்.

181. அங்கு கடைசியில் நன்கு சைதன்ய ரூபி யான எனது; ஞானம் ஏற்படுகிறது அதனுல் மோக்ஷமடைகிருன். ஞானத்தினுல்தான் முக்தி. வேறு விதமாக இல்லை.

182. யாருக்கு இங்கேயே எனது ஞான சரீர மான ப்ரத்ய காத்மஞானம் ஏற்படுகிறதோ அவ னுடைய பிராணன் வெளியில் போவதில்லை.

183. கழுத்தில அணிந்திருக்கும் ஆபரணத்தை மறந்து தேடும்பொழுது எதிரில் உள்ள ஒருவன்

கழுத்தில் காண்பிப்பது போல். ஆசார்யானுக் ரஹத்தினுல் ப்ரும்மாகவே இருப்பவனுக்கு ப்ரும்ம உபதேசம் கிடைத்து ஞானம் ஏற்பட்டால் பரம்ம மாகவே ஆகிருன்.

184. ஞானத்தினுல் அஞ்ஞானம் போனபடி யால் கழுத்து ஆபரணம் போல் அடையப்பட்டதே அடைப்படுகிறது. எனது ஞானரூப சரீரம் அறியப் பட்டதைக் காட்டிலும் வேருனது அறியப்படாத தைக் காட்டிலும் வேருனது.

185-187. இந்த உலகத்தில் ஆத்மாவை கண்ணுடியில் காணுவது போல் காணலாம். பித்ரு லோகத்தில் ஜலத்தில் காணுவது போல். ஏனது லோகத்தில் நிழலும் வெய்யலும் போல் நன்கு விசதமாய்க் காணப்படும்.

எவன் வைராக்யம் மட்டும் அடைந்து ஞான மடையாமல் மறிக்கிருனே அவன் கல்பம் முடியும் வரை ப்ரும்மலோகத்தில் வசித்துவிட்டு சுத்தமான ஐச்வர்யமுள்ளவன் வீட்டில் பிறக்கிருன்,

188. அங்கு ஞான ஸாதனங்களை அனுஷ் டித்து ஞானத்தையடைகிருன். வேற ராஜன், பல ஜன்மங்களினுல்தான் ஞானம் ஏற்படும். ஒரு ஜன்மத்தில் வராது.

189. ஆகையினுல் நல்ல முயற்சி செய்து ஞானத்தையடைவதற்கு யத்னம் செய்ய வேண் டும். இல்லாவிட்டால் பெரிய நஷ்டம். இந்த ஜன்மம் மிக துர்லபம். மறுபடி கிடைக்காது.

190. அதிலும் பிராமணனுயும் வேதாத்ய யனம் செய்யும் பாக்யமும் அரிது. மேலும் சமாதி ஷட்கம் யோக ஸித்திகள் அரிது.

191. மேலும் உத்தம குருவைக் காணுவதும் அவ்விதமே இந்திரியங்கள் நன்கு சுறுசுறுப்பாக

இருப்பதும் சரீரம் பரிசுத்தமாக இருப்பதும் மிக அரிது.

192 193. அனேக ஜன்மாக்களில் செய்த புண்யத்தினால் மோக்ஷத்தில் ஆவலுண்டாகிறது. இவ்விதம் ஸாதனங்கள் பயனுள்ளதாக உள்ள ஸமயத்தில் எவன் ஞானத்திற்காக முயற்சிக்கவில்லையோ அவன் பிறப்பு பயனற்றது. ஆகையினால் சக்திக்குத் தகுந்தவாறு ஞானத்தின் பொருட்டு முயற்சிக்க வேண்டும்

194. வேதாந்தத்தில் ஒவ்வொரு பதம் கேட்டாலும் அச்வமேத பலன் கிடைகின்றது.

195. ஒவ்வொருவரிடத்திலும் 'பாலில் நெய் உள்ளது போல் ஞானம் உள்ளது, மனமாகிய மத்தினால் கடைய வேண்டும்.

196-197. ஞானத்தை யடைந்தால் க்ருதார்த்தன் என்று வேதாந்த பேரிகை.


எல்லாப் பொருளும் என் இருப்பிடம். எல்லா காலமும் எனது வ்ரதங்கள். எல்லா காலத்திலும் உத்ஸவம் செய்யலாம் நான் ஸர்வரூபிணீயாக இருக்கிறேன் எல்லாம் சுருக்கமாய்க் கூறப்பட்டது. மேலே என்ன கேட்க விரும்புகிறாய்.

198. இந்த கீதா சாஸ்திரத்தை நல்ல சீடரல்லாதவர்க்கும் பக்தியற்றவற்கும் போக்கிரி, கெட்ட எண்ணமுள்ளவன் இவர்களிடம் கூறக்கூடாது.

199. ச்ராத்த காலத்தில் பிராமணர்கள் அருகில் படித்தால் பித்ருக்கள் திருப்தியடைந்து எனது ஸ்தானத்தை யடைகிறார்கள்.

200. இந்த கீதை ரஹஸ்யமாயுள்ளது முயற்சியுடன் காக்கவேண்டும் உன்னால் கேட்டது எல்லாவற்றையும் கூறிவிட்டேன்.

தேவீ கீதையின் பொருள் முற்றிற்று.



மாயூரம், தர்மக்ஞ ஸ்ரீ M. ராமனாத தீக்ஷிதர்

எமது வெளியீடு

			ரூ. பை.
1.	பாரத ஸ்தல யாத்திரை. பதரிமுதல் ராமேச்வரம் வரை உள்ள க்ஷேத்திர மஹிமை		10-00
2.	ஸாமஸார ஸர்வஸ்வம் ஸம். ஆங். ஹிந்தி.		8-00
3.	ஸாமவேத ஸர்வஸ்வம்—தமிழ்		5-00
4.	தேவதாத்யாய ஸம்ஹிதோபநிஷத்		2-50
5.	ஆசாரமுறை (ஆங்கிலம்)		3 00
6.	தேவீ ஸ்தோத்ர ரத்னமாலா		2-25
7.	தீக்ஷிதேந்திர ஸ்துதி—5 துதிகள்		1-25
8.	ஸர்வப்ராயச்சித்த ப்ரயோகம்		1-00
9.	பஞ்சாயதன பூஜை—இந்தி		0-30
10.	தேவீபுஜங்கம்		1-00
11.	சாமவேத ஸந்த்யாவந்தனம்		1-50
12.	சாகம்பரீ ஸஹஸ்ரநாமம்	லிப்கோ வெளியீடு	1-00
13.	ரிக்ஷிகளும் கோத்ரமும்	லிப்கோ வெளியீடு	6-50
14.	தேவீதத்வம்		0-40

கிடைக்குமிடம் : 21-B. பீமண்ண முதலி தெரு, மதராஸ்-18.

Elango Achukoodam 114-B, R. H. Road., Ms-4